## நான்காவது அடிப்படை

### அர∴பாத் மைதானத்தில் தங்கியிருத்தல் (உ∴கூ∴ப் அர∴பா)

ஹஜ்ஜுக்கான முக்கிய அடிப்படையானது இதுவே. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: அரஃபாவே (உஃகூஃப்) ஹஜ் ஆகும். (அஸ்ஹாபுஸ் சுனன்). எவருடைடய உஃகூஃபும் விடுபட்டுவிட்டால் அவருடைய அந்த வருடத்தின் ஹஜ் நிறைவேறாது போய்விட்டதாக ஆகிவிடும். அதற்குப் பதிலாக வேறு மாற்று ஒன்றுமில்லை.

**தங்குமிடம்** அரஃபா மைதானத்தில் எங்கு தங்கிக்கொண்டாலும் அது சரி யானதே. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

قَدْ وَقَفْتُ هَا هُنَا وَعَرَفَةُ كُلُّهَا مَوْقِفٌ

*பொருள்: நான் இங்கே உஃகூஃப் செய்துள்ளேன், அரஃபா (மைதானம்) முழுவதுமே உஃகூஃபிற்கான இடமாகும்* (அபூ தாவூத், இப்னு மாஜா)

**தங்கும் நேரம்** துல் ஹிஜ்ஜாவின் ஒன்பதாம் நாள் அரஃபாவின் நாளாகக் கருதப்படுகின்றது. அன்று நண்பகல் முதற்கொண்டு இதற்கான நேரம் துவங்குகின்றது. அடுத்த நாளான யவ்முன் நஹ்ரு எனப்படும் ஃகுர்பானியின் நாளான துல் ஹிஜ்ஜாவின் பத்தாம் நாள் ஃபஜ்ரு உதயமாவதற்கு முன்பு வரை தொடர்கின்றது. ஹஜ் நிறைவேற்றுபவர் அரஃபாத் மைதானத்தில் பகலின் ஒரு பகுதியும் இரவின் ஒரு பகுதியும் தங்கியிருக்கவேண்டும். இருப்பினும், ஒருவர் பகல் நேரத்தில் அங்கு சென்றடைய முடியாது போனால் இரவில் சென்றடைந்துவிட்டாலும் அதுவே போதுமானது, அவர் அரஃபாவில் தங்கியிருந்ததாகக் கருதப்படுவார், அதாவது அரஃபாவில் தங்கவேண்டிய கட்டாயமான செயலை அவர் நிறைவேற்றிவிட்டார். பெரும்பாலான உலமாக்களின் கருத்து என்னவெனில், ஹஜ் நிறைவேற்றுபவர் இரவு வரையிலும் அரஃபாவில் தங்கவேண்டும் என்பதாகும்.

### அர∴பாத் மைதானத்தில் எவ்வளவு நேரம் தங்கியிருக்கவேண்டும? (மி∴க்தார் உ∴கூ∴ப்)

உஃகூஃபின் குறைந்த அளவிலான தங்கும் நேரம் என்னவெனில், ஹஜ் நிறைவேற்றுபவர் அங்கே சூரிய அஸ்தமத்திற்குப் பின் வந்து சற்று நேரம் தங்கி ஓய்வெடுத்துக்கொள்வதாகும். இந்த அளவிற்குக்கூட ஒருவர் உஃகூஃப் செய்ய முடியாதுபோனால் அவருடைய ஹஜ் முற்றுப்பெறாது, அவர் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தவறிவிட்டதாகக் கருதப்படும்.

www.uzairfalahi.com

## அர∴பாத் மைதானத்தில் தங்கியிருக்கும்போது கடைபிடிக்கப்படவேண்டிய சுன்னத்துகள்

1 வாதி நிம்ரஹ்விலேயே குளித்துக்கொள்ளவேண்டும்

2 இமாம் இரணடு க்ஹ¯த்பா நிகழ்த்தி ஹாஜிகளுடன் ஸ்ஜ¯ஹர், அஸர் ஆகிய தொழுகைகளை ஒன்றாகவும் ∴கஸர் தொழுகைகளாகவும் தொழவேண்டும்

3 ஜபல் ரஹ்மத்திற்குக்கீழ் பெரிய பாறைகளுக்கிடையே தங்கவேண்டும், ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் அங்கேதான் உஃகூஃப் செய்தார்கள்

4 ∴கிப்லாவை நோக்கித் தூய்மையுடன் இருக்கவேண்டும், சத்ரு முறையில் மறைக்கவேண்டிய வகையில் கவனத்துடன் இருக்கவேண்டும்.

5 காரணமின்றி எந்த ஒன்றையும் நிழலால் மறைக்கக்கூடாது

6 சண்டை சச்சரவு, விவாதம் கருத்துவேறுபாடு, ஏசிப்பேசுதல் மற்றும் வீண் பேச்சு ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும்

7 பெருமளவில் நன்மையான காரியங்களில் ஈடுபாடு கொள்ளவேண்டும் மற்றும் அதிக அளிவில் துஆ செய்துகொண்டிருக்கவேண்டும்

8 தூய்மையுடனும் உதூவுடனும் இருக்கவேண்டும்

9 ஹஜ் நிறைவேற்றுபவர்கள் அர∴பா நாளன்று நோன்பு நோற்கக்கூடாது

10 அல்லாஹ்வை தியானிப்பதில் முழுமனதுடன் ஈடுபாடு கொள்ளவேண்டும் மேலும், எந்தச் செயல்கள் மற்றும் செயல்களினால் கவனம் பாதிக்கப்படுமோ அவற்றைத் தவிர்க்கவேண்டும்

11 அல்லாஹ்விடம் மன்றாடி துஆ கேட்கவேண்டும் மற்றும் வெளித்தோற்றத்தாலும் யாசகம் கேட்கும் ஒருவன் எவ்வாறு கெஞ்சி மன்றாடிக் கேட்கின்றானோ அவ்வாறு பாவிக்கவேண்டும். இதனை ஒரு கவிதையில் எவ்வாறு பிரதிபலித்துக்காட்டப்பட்டுள்ளது என்பதை கவனியுங்கள்.

بھیگی ہوئی پلکیں ہوں تو پھیلا ہوا دامن

مائل بہ کرم وہ ہوں تو پھر چاہیے کیا اور

12 தல்பிய்யா மற்றும் தஹ்லில் சொல்லுதல்

* * *



www.uzairfalahi.com